Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 25 / 2021

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.2**

| | | | |
|---|---|---|---|
| Name: | கோமதி | Calling: | இல்லதரசி |
| Father's / Husband's Name: | தியாகராஜன் | Religion: | |
| Village: | பெரியநாயக்கம்பாளையம் | Age: | 38 |
| Taluk: | கோயம்புத்தூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 14.07.2025

(1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை. எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது. மனு அனுமதிக்கப்பட்டது.)

அ.சா. 2 மனுவின் பேரில் அழைத்து குறுக்கு விசாரணை

கோபி எனக்கு என்ன உறவு முறை என்றால் என் சித்தப்பா மகன் ஆவார். நான் எப்போது திருமணம் செய்துகொண்டு கோயம்புத்தூர் சென்றேன் என்றால் 12.09.2019. யார்யாருக்கு எப்போது சண்டை நடந்தது என்றால் அப்பாவிற்கும், கோபிக்கும் சண்டை நடந்தது, தேதி நினைவில்லை. சண்டை நடந்த போது நான் சம்பவயிடத்தில் இருந்தேனா என்றால் இருந்தேன். அந்த இடத்தில் யார் யார் இருந்தார்கள் என்றால் அப்பா, கோபி மற்றும் ஊர் ஜனங்கள் அனைவரும் இருந்தனர். ஊர் ஜனங்கள் அனைவரும் சண்டையை பார்த்தார்கள் என்று போலிசார் விசாரணையில் கூறினேனா என்றால் இல்லை. என்னை போலிசார் எங்கு விசாரித்தார்கள் என்றால் காவல் நிலையத்தில் வரவேற்பறையில் வைத்து விசாரித்தார்கள். காவல்

நிலையத்தில் வைத்து என்னை சம்பவத்திற்கு பிறகு எப்போது விசாரித்தார்கள் என்றால் சம்பவத்திற்கு மறுநாள் காவல் நிலையத்திற்கு என்னையும், என் அப்பாவையும் வரவழைத்து விசாரித்தார்கள். ஏற்கனவே என் அப்பாவிற்கும்,கோபியின் அப்பாவிற்கும் சொத்து சம்மந்தமான பிரச்சனை உள்ளதா என்றால் உள்ளது. எனது தாத்தா கோபிக்கு ஒரு சென்ட் நிலத்தை தான செனட்டில்மெண்ட் கொடுத்துவிட்டதற்காகத்தான் பிரச்சனை நடந்தது என்றால் இல்லை, அதற்கு முன்பிருந்தே உள்ளது.

எனது தந்தை எனது தாத்தாவின் மரணம் குறித்து சந்தேகம் இருந்ததால் சென்னை உயர்நீதிமன்றத்தில் விசாரிக்க உத்தரவு வாங்கி வந்தார் என்றால் சரிதான். அதில் சுமார் 15 நபர்களை விசாரித்து எனது பாட்டி அவ்வாறு ஒரு சம்பவம் நடக்கவில்லை என்றும், இயற்கையாகவே தான் என் தாத்தா இறந்துவிட்டார் என கூறிதால் தான் அது முடிவுற்றது என்றால் சரிதான். அதன் தொடர்ச்சியாக தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வாணியம்பாடி உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 65/2020 எனது தந்தை வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் அது குறித்து தெரியாது. சம்பவம் எத்தனை மணிக்கு நடந்தது என்றால் 04.00 மணியிலிருந்து 05.00 மணிக்குள் நடந்தது. அந்த சம்பவத்தை யார் யார் பார்த்தார்கள் என்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் எனது தந்தையை எத்தனை மணிக்கு சேர்த்தோம் என்றால் 05.45 மணியிலிருந்து 06.00 மணிக்குள் இருக்கும். அங்கு சேர்த்தசமயம் மருத்துவர் மற்றும் போலிசாரிடம் நான் தான் தகவல் தெரிவித்தேன் என்றால் சரிதான். அங்கு போலிசார் விசாரணை செய்தபோதும் நான் தான் தகவல் சொன்னேன் என்றால் சரிதான்.

என்னை அரசு மருத்துவமனையில் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தபின் நான் தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். என் தந்தையை போலிசார் எந்த வித விசாரணையும் செய்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். என் தந்தையை போலிசார் மருத்துவமனையில் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அதை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தால் அது தவறு என்றால் சரிதான். கோபி என் தந்தையிடம் சூரி கத்தியை காண்பித்து மிரட்டியதாக நான் கூறிய சூரி கத்தியை போலிசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் அவ்வாறு

ஒப்படைக்கவில்லை. அந்த சூரி கத்தியின் நீளம் எனக்கு தெரியுமா என்றால் சுமார் 1 அடி இருக்கும்.

நான் சொல்வதுபோல் சம்பவமே நடக்கவில்லை என்றாலும், என் தந்தைக்கும் கோபிக்கும் எவ்வித வாக்குவாதமும் ஏற்படவில்லை என்றாலும், ஏற்கனவே உள்ள முன்விரோதத்தினால் அவரை தண்டிக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு பொய்யான புகாரை அளித்திருக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடக்காததால் தான் நானும், என் தந்தையும் சம்பவத்தன்று வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட நிலையில் மறுதினம் அன்று நானும், என் தந்தையும் காவல் நிலையத்தில் ஆஜராகி வாக்குமூலம் கொடுத்தேன் என்று சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் நான் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ப்பட்டது என்றால் சரிதான். சம்பவத்தன்று என் தந்தைக்கு பல் உடைந்ததாக கூறியுள்ள நிலையில் அந்த பல்லை எடுத்து போலிசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. என் தந்தை தான் என் பாட்டி வீட்டில் படிக்கட்டு ஏறும்போது தவறிவிழுந்து அடிப்பட்டது என்றாலும், அந்த காயத்தை பயன்படுத்தி எதிரி மீது தவறான புகார் அளித்துள்ளோம் என்றாலும் சரியல்ல.

இந்த வழக்கில் யார் யாரை கண்ணுற்ற சாட்சியாக சேர்த்துள்ளார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். யார் யாரை கண்ணுற்ற சாட்சியாக சேர்த்துள்ளார்கள் என்றால் காந்தி, அண்ணாமலை ஆகியோரை சேர்த்துள்ளார்கள். காந்தி, அண்ணாமலை ஆகியோர் தங்களது நீதிமன்ற சாட்சியத்தில் இவ்வாறு ஒரு சம்பவமே நடக்கவில்லை என்று சாட்சியமளித்துள்ளார்கள் என்றால் சரியல்ல, பொய் கூறியிருக்கிறார்கள். சம்பவத்தின்போது எதிரி கோபிநாத் அந்த இடத்தில் இல்லை என்றாலும், அவருடைய அப்பா தான் அங்கு இருந்தார் என்றாலும், அவ்வாறு சாட்சியமளித்துள்ளார்கள் என்றாலும் சரியல்ல. என் தந்தைக்கு ஆதரவாக கோபிக்கு எதிராக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. கோபி பெயரில் என் தாத்தா சட்டப்படி தான் தான செட்டில்மென்ட் ஆவணம் செய்திருக்கிறார் என்றாலும், அதனால் ஏற்பட்ட பொறாமையால் தான் கோபியின் மீது பொய்யான புகாரை கொடுத்து அதன்பேரில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த

சம்மந்தமும் இல்லை என்றாலும், இதுபோன்ற ஒரு சம்பவமே நடக்கவில்லை என்றாலும் சரியல்ல.

என் தந்தை சொன்னதின் அடிப்படையில் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றாலும், என் தந்தை புகார் எதுவும்கொடுக்கவில்லை என்றும், நான் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் இந்த முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றும், அதன்அடிப்படையில் நான் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரிதான். நான் போலிசாரிடம் அரசுமருத்துவமனையில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும், அதனடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல, நான் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் தான் இந்த முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சாட்சி கையொப்பம்
(ஒம்.)கோமதி

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K